பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**01 12 2025 MONDAY 6.30 PM**

**மாநிலச் செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

**1)** வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 12 மணிநேரத்தில் வலுவிழக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**2)** தொடர் மழை காரணமாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு நாளை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**3)** தமிழகத்தில் 99 புள்ளி இரண்டு சதவீத வாக்காளர் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

**4)** சென்னை கிண்டி ரேஸ் கிளப் நிலத்தில் மழைநீரை சேகரிக்கும் வகையில் குளங்கள் மற்றும் பூங்கா அமைக்க சென்னை உயர்நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

**5)** உலக இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Divyanshi Bhowmick** வெண்கலப்பதக்கம் வென்றார்.

**- இனி விரின செய்திகள் ---**

<<<<<<>>>>>>

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 12 மணிநேரத்தில் வலுவிழக்கக்கூடும் சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், திருவள்ளூர், சென்னை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அதிகனமழை நீடிக்கக்கூடும் என்றார்.

***(Sound Byte — செந்தாமரை கண்ணன் (1) - 59 Sec.)***

கடல் பகுதிகளில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் திரு செந்தாமரை கண்ணன் கேட்டுக்கொண்டார்.

***(Sound Byte — செந்தாமரை கண்ணன் (2) - 30 Sec.)***

இதற்கிடையே, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று காலை முதல் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில் பெய்துவரும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — தனசேகரன் — 40 Sec.)***

தொடர் மழை காரணமாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு நாளை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மழை பாதிப்புகள் மற்றும் பயிர் சேதங்கள் குறித்து முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று சென்னையில் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

மழையினால் பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் தேங்கியுள்ள வெள்ள நீரை வெளியேற்றுவதற்கான பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு முதலமைச்சர் அறிவுறுத்தியதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**Ditwah** புயல் காரணமாக ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்த விவரங்களை சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் ஆட்சியர்கள் விரைந்து வழங்குமாறு திரு மு.க.ஸ்டாலின் இக்கூட்டத்தில் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

**Ditwah** புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க திமுக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் பயிர் பாதிப்பு குறித்த கணக்கெடுப்பை திமுக அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று கோரியுள்ளார்.

<<<<<<>>>>>>

மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணத் தொகையை தமிழக அரசு வழங்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், டெல்டா மாவட்ட விவசாயிகள் கனமழையினால் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதனை கருத்தில்கொண்டு ஏக்கருக்கு 35 ஆயிரம் ரூபாய் இழப்பீடாக தமிழக அரசு வழங்க வேண்டும் என்றும் திரு வீரபாண்டியன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>

மத்திய அரசின் திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதையே முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வாடிக்கையாக கொண்டுள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

தேனி மாவட்டம் கடமலைகுண்டு கிராமத்தில் திருமண நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

ஆளுநர் மாளிகையின் பெயரை மக்கள் மாளிகை என மாற்றம் செய்திருப்பதற்கு எதிராக முதலமைச்சர் கருத்து தெரிவித்திருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

முதலமைச்சரின் இதுபோன்ற செயல்பாடுகள் ஏற்புடையது அல்ல என்றும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சென்னை கிண்டி ரேஸ் கிளப் நிலத்தில் மழைநீரை சேகரிக்கும் வகையில் குளங்கள் அமைக்கவும், சுற்றுச்சூழல் பூங்கா அமைப்பதற்கும் அனுமதி அளித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இப்பிரச்சினை தொடர்பான மேல் முறையீட்டு மனுவை விசாரணை செய்த நீதிபதிகள் திரு எஸ் எம் சுப்பிரமணியம், திரு முகமது சபீக் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளின்கீழ், 99 புள்ளி இரண்டு சதவீத விண்ணப்ப படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதன்படி, இதுவரை 6 கோடியே 35 லட்சத்து 99 ஆயிரத்து 698 வாக்காளர்களுக்கு விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதில் 91 புள்ளி நான்கு ஒன்பது சதவீத விண்ணப்பங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

கார்த்திகை தீப திருவிழாவை முன்னிட்டு அகல் விளக்குகளின் விற்பனை அதிகரித்துள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் ஐந்து ரூபாய் தொடங்கி, 500 ரூபாய் வரை அகல் விளக்குகள் விற்பனை செய்யப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — தண்டபாணி -30 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருவாரூர் மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட பயிர்களை கணக்கெடுக்கும் பணி தொடங்கியது.

----------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி சிவ சௌந்தரவல்லி இன்று வழங்கினார்.

----------------

வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு அருகே யானை உயிரிழந்தது குறித்து வனத்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

----------------

தூத்துக்குடி மாவட்டம் ஒட்டபிடாரம் அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். 11 பேர் காயமடைந்தனர்.

---------------

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூரில் எயிட்ஸ் விழிப்புணர்வு தின பேரணி இன்று நடைபெற்றது.

----------------

சேலம் மாவட்டம் ஓமலூர் சின்ன திருப்பதி வெங்கடரமண சுவாமி கோவில் கும்பாபிஷேகம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

----------------

திருச்சி — தாம்பரம் இடையே செவ்வாய், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இயக்கப்பட்டு வந்த சிறப்பு ரயில் சேவை இம்மாத இறுதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே

கூறியுள்ளது. மறுமார்க்கத்தில் இந்த சிறப்பு ரயில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இயக்கப்படுகிறது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Divyanshi Bhowmick** வெண்கலப்பதக்கம் வென்றார்.

ருமேனியாவில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் **15** வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

மகளிர் குழு பிரிவிலும் இந்தியாவிற்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.

---------------------

லண்டனில் நடைபெற்றுவரும் சர்வதேச செஸ் போட்டியின் ஆறாவது சுற்று முடிவில் இந்தியாவின் பிரக்யானந்தா முதலிடத்தில் உள்ளார்.

இதுவரை ஐந்து புள்ளிகளை அவர் பெற்றுள்ளார்.

------------

உலகக்கோப்பை மகளிர் ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று நமீபியாவை எதிர்கொள்கிறது.

சிலியின் சாண்டியாகோவில் இப்போட்டி இரவு மணி **7.45-**க்கு தொடங்குகிறது.

-----------------

துபாயில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியின் முதலாவது தகுதிசுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **Shrivalli Bhamidipaty** வெற்றிபெற்றார்.

**<<<<<<END>>>>>>**